# Public Service Announcement

# வாகன் நகராட்சியின் 2026 நகராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் காலக்கெடு ஆகஸ்ட் 21-ஆம் தேதி முடிவடைகிறது

**வாகன், ஒன்டாரியோ (ஆகஸ்ட் 7, 2026)** – வாகன் நகராட்சியின் 2026 நகராட்சித் தேர்தலில் போட்டியிட விரும்பும் நபர்கள், கவுன்சில் உறுப்பினர் அல்லது உள்ளூர் பள்ளி வாரிய டிரஸ்டி/அறக்காப்பாளர் பதவிகளுக்கான தங்களது வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ளன.

அதிகாரப்பூர்வ வேட்புமனுத் தாக்கல் காலம் வெள்ளிக்கிழமை, **ஆகஸ்ட் 21, பிற்பகல் 2 மணிக்கு** நிறைவடைகிறது. அதற்குள் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள், கீழ்க்காணும் பதவிகளில் ஏதேனும் ஒன்றிற்காக தங்களது வேட்புமனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்:

**வாகன் கவுன்சில்**

- மேயர்
- உள்ளூர் மற்றும் பிராந்திய கவுன்சிலர் (மொத்தம் 4 பேர் தேர்வு செய்யப்படுவர்)
- வார்டு 1 கவுன்சிலர் (மேபிள் / கிளைன்பர்க்)
- வார்டு 2 கவுன்சிலர் (மேற்கு வுட்பிரிட்ஜ்)
- வார்டு 3 கவுன்சிலர் (வுட்பிரிட்ஜ்/வேலூர்)
- வார்டு 4 கவுன்சிலர் (கான்கார்ட் / தோர்ன்ஹில் நார்த்)
- வார்டு 5 கவுன்சிலர் (தோர்ன்ஹில்)

**யார்க் பிராந்திய மாவட்ட பள்ளிக் குழு (York Region District School Board)**

- அறக்காப்பாளர் – கிங் மற்றும் வாகன் வார்டு 1 (இந்தப் பதவிக்கான வேட்புமனு தாக்கல்களைக் கிங் டவுன்ஷிப் கிளார்க் நிர்வகிப்பார்)
- அறக்காப்பாளர் – வாகன் வார்டுகள் 2 மற்றும் 3
- அறக்காப்பாளர் – வாகன் வார்டுகள் 4 மற்றும் 5

**யார்க் கத்தோலிக்க மாவட்ட பள்ளிக் குழு (York Catholic District School Board)**

- அறக்காப்பாளர் – வாகன் வார்டு 1

- அறக்காப்பாளர் – வாகன் வார்டு 2
- அறக்காப்பாளர் – வாகன் வார்டுகள் 3, 4 மற்றும் 5 (மொத்தம் 2 பேர் தேர்வு செய்யப்படுவர்)

**Conseil scolaire Viamonde**

- அறக்காப்பாளர் – யார்க் பிராந்தியம்/Conseillers scolaires - Région de York

**Conseil scolaire catholique MonAvenir**

- அறக்காப்பாளர் – யார்க் பிராந்தியம்/Conseillers scolaires - Région de York

வருங்கால வேட்பாளர்கள், அதிகாரப்பூர்வ வேட்புமனுத் தாக்கல் காலப்பகுதியில், தங்களுடைய வேட்புமனு தாக்கல் படிவங்களை, வாகன் நகர மண்டபத்தின் (2141 மேஜர் மெக்கென்சி டிரைவ்) முதல் தளத்தில் அமைந்துள்ள நகர எழுத்தர் அலுவலகத்தில், முன்பதிவு செய்யப்பட்ட சந்திப்பு நேரத்தின் அடிப்படையில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

**வேட்புமனு தாக்கல்கள்,** திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை உள்ள வழக்கமான பணிநேரங்களில், **முன்பதிவு செய்யப்பட்ட நேரங்களில் மட்டுமே ஏற்கப்படும்.** முன்பதிவு செய்ய, Elections Vaughan-ஐ மின்னஞ்சல் elections@vaughan.caஅல்லது தொலைபேசி (905-832-2281, ext. 6104) மூலம் முன்கூட்டியே தொடர்புகொள்ள வேண்டும்.

வேட்புமனுத் தாக்கல் நாளான வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 21 அன்று, காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை, முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்று முன்பதிவு தேவையில்லை.

**வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்**
தேர்தல் நாள் நெருங்கி வருகிறது. வாக்களிக்கத் தகுதியுடையவர்கள், registertovoteon.ca இணையதளத்தைப் பார்வையிட்டு, தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

நகராட்சி தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்கள்:

- கனடிய குடிமகனாகவும், குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும்; மற்றும்
- அந்த நகராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்; அல்லது

# Public Service Announcement

- அந்த நகராட்சியில் வசிக்காதவராக இருந்தாலும், அங்குச் சொத்து உரிமையாளராக அல்லது வாடகைதாரராக இருக்க வேண்டும்; அல்லது
- அந்த நகராட்சியில் அந்தச் சொத்து உரிமையாளர் அல்லது வாடகைதாரரின் துணையாளராக இருக்க வேண்டும்.

**முக்கியமான தேதிகள்:**

- **வெள்ளிக்கிழமை, அக்டோபர் 9 முதல் ஞாயிற்றுக்கிழமை, அக்டோபர் 18 வரை** – முன்கூட்டிய வாக்களிப்பு (ஆன்லைன் வாக்களிப்பு)
- **திங்கட்கிழமை, அக்டோபர் 26** – வாக்களிப்பு நாள்.

வாக்காளர் தகுதி, வாக்களிக்கும் முறை, முக்கியத் தேதிகள், வேட்பாளர் வேட்புமனு தாக்கல் உள்ளிட்ட 2026 நகராட்சி தேர்தல் தொடர்பான அனைத்து தகவல்களையும் vaughan.ca/**elections** என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு அறிந்துகொள்ளலாம்.

புதுப்பிப்புகள் மற்றும் நிகழ்நேரச் செய்திகளுக்காக Vaughan News-ஐ சந்தா செய்யவும், மேலும் அதிகாரப்பூர்வ நிறுவனச் சேனல்களை X, Facebook, Instagram மற்றும் LinkedIn-இல் பின்தொடரவும்.

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca